<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>

<u>அ.வ.எண். 30/2019</u>

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமுலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2025 – ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 01** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி – 01.09.2025**

**பெயர் – முகமது சாதிக்**

**த/பெ – அப்துல் ஜலிக்**

**சாட்சி – PW1**

**விசாரணை தொடங்கும் நேரம்–** 04.46.p.m

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

4. நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு தமிழ் தெரியும் ஆங்கிலம் தெரியாது. ஆங்கிலம் முற்றிலும் தெரியாது. வா.சா.ஆ 2ல் சொத்து விவரத்தில் தெற்கு பக்கம் சர்வே எண் 257 நிலம் என குறிப்பிட்டுள்ளது என்றால் குறிப்பிட்டுள்ளது சரிதான். வா.சா.ஆ 3ல் அது கிரைய சொத்து விவரத்தில் தெற்கு சர்வே எண் 257 நிலம் என குறிப்பிட்டுள்ளது என்றால் கலிலூார் ரகுமான் பத்திரத்தில் கிரையம் எழுதி கொடுத்ததாக உள்ளது அது பழைய கிரைய பத்திரம். வா.சா.ஆ 3 ல் தெற்கு பக்கம் சர்வே எண் 257 நிலம் என உள்ளதாக குறிப்பிட்டுள்ளது என்றால் ஆமாம்.

5. வா.சா.ஆ 2 மற்றும் வா.சா.ஆ 3 பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள சொத்தினை சேர்த்து தான் நான் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். அப்துல் சலீம் மற்றும் கலிலூார் ரகுமான் மொத்த சர்வே எண் 258/9 சொத்தினை வாங்கிய பிறகு சர்வே எண் 258–ல் 9எ, 9பி என உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண் 258–ல் 9எ, 9பி

இரண்டையும் நான் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். நான் வாங்குவதற்கு முன்பே அது உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் ஆம்.நான் மொத்தமாக 1411 சதுர அடி வாங்கினேனா என்றால் ஆம். சாட்சியிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ 1–ல் நான் கிரையம் பெற்ற ஆவணம். அதிலும் சொத்து விவரத்தில் தெற்கு பக்கம் சர்வே எண் 257 நிலம் என குறிப்பிட்டுள்ளது என்றால் குறிப்பிட்டுள்ளது.

6. வழக்கு சொத்தை ஜனவரி மாதம் 2018 ல் கிரையம் பெற்றேன். மேற்படி அப்துல் சலீம் மற்றும் கலிலுார் ரகுமான் வாங்கிய சொத்தினை நான் அளக்காமல் அப்படியே வாங்கிவிட்டேன் என்றால் அளந்து பார்த்து தான் வாங்கினேன். விஷ்னுஷர்மா 06.03.2013–ல் பிரதிவாதிகளுக்கு கிப்ட் பத்திரம் (Gift deed) ஏற்படுத்தி கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. சா்வே எண்.257–1 ல் அமைந்துள்ள பிளாட் எண்.2, 3, 10 மற்றும் 11 மொத்த விஸ்தீரணம் 8800 சதுர அடிகள் பிரதிவாதிகளுக்கு மேற்கூறிய தானத்தில் மூலம் கிடைத்துள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

**(மேலும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது).**

**விசாரணை முடியும் நேரம். 5.15 p.m.**